# அசையட்டும் இந்த அக்னி

## வைணவச் சுடராழி டி.ஏ. ஜோஸப், பாண்டிச்சேரி

பாண்டிச்சேரியில் வாழ்ந்து வரும் திரு டி.ஏ.ஜோஸப் அவர்கள் வைணவ சமயத்தில் மிகுந்த பற்றுள்ளவர். ஆழ்வார்கள் வரலாறு, ஆசார்யர்கள் சிறப்பு, ஸ்ரீவசனபூஷணம் போன்ற பல விஷயங்களைப் பற்றி மிக மிக எளிய நடையில் தொடர் சொற்பொழிவுகள் ஆற்றி வருவதோடல்லாமல் வைதிக மதத்தின் உயர்வு பற்றியும் புத்தகங்கள் எழுதியுள்ளார். 'கடவுளை நம்புபவன் காட்டுமிராண்டியா?' என்ற தலைப்பில் இவர் எழுதியுள்ள புத்தகம் பண்டிர்கள், பாமரர்கள் என்ற வேறுபாடில்லாமல் அனைவரையுமே மிகக் கவர்ந்துள்ளது. வைணவசமயக் கருத்துகளை இக்காலத்தவர்களும் ரசிக்கும் வகையில் பேசும் ஆற்றலும், எழுதும் ஆற்றலும் இவருக்கு அமைந்துள்ளதைப் பாராட்டி, ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீபெரும்பூதூர் வரத யதிராஜ ஜீயர் ஸ்வாமி இவருக்கு 'வைணவச் சுடராழி' என்ற விருதினை வழங்கி ஆசீர்வதித்துள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட தலைப்பில் இவர் ஆற்றியுள்ள சொற்பொழிவுகள் ஒலிநாடாக்களிலும் கிடைக்கின்றன. (இவருடைய புத்தகங்கள் அல்லது ஒலிநாடக்களை வேண்டுவோர் "டி.ஏ. ஜோஸப், 18, 4வது க்ராஸ் (முதல் மாடி), ரெயின்போ நகர், பாண்டிச்சேரி 605011 என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி 0413-2210187) அடியவர்களின் பகைவர்களை அழிக்கும் பரமனின் சுடராழிபோல், வைதிக சமயத்தை இழிவு படுத்தும் புல்லுருவியை அழிப்பதற்கு வைணவச் சுடராழி புறப்பட்டுவிட்டது. -ஆசிரியர்

பாதையோரப் பூங்காவில் அமர்ந்து பல வேடிக்கைகளையும் பார்த்துக் கொண்டு இருப்பவன் கையில் எங்கிருந்தோ காற்றில் பறந்து வந்து கையில் விழும் பக்கோடா கட்டியிருந்த பேப்பர் போல,

வாழ்க்கையின் அன்றாட வேலை நெரிசலுக்கு ஈடு கொடுத்துக் கொண்டிருந்த என் கையில் இந்த மாத (13.7.2005) நக்கீரன் பத்திரிகை வந்து விழுந்தது. ஆர்வமில்லாமல் புரட்டினேன். அதில் "இந்துமதம் எங்கே போகிறது?" என்ற கட்டுரைத் தலைப்பு என் கவனத்தை ஈர்த்தது. "என்றும் நிலையாக இருப்பது இந்துமதம். அது எங்கிருந்தும் எங்கும் போவதில்லை. இந்துமக்களின் வாழ்க்கைப் போக்கு வேண்டுமானால் காலத்துக்கு காலம் திசை மாறலாம். இது என்ன தலைப்பே தவறாக இருக்கிறதே," என்று சிந்தித்த வண்ணம் கண்களை மேய விட்டேன். இடதுபக்க மூலையில் திருமண்ணும் பூணூலும் தரித்த ஒரு ஸ்ரீவைஷ்ணவரின் திருவுருவம் தென்பட்டது. உடனே அவரை மனதால் சேவித்துக் கொண்டேன். ஏனென்றால் பகவானைவிட

அவன் அடியவர்கள் பெரியவர்கள் என்று ஸ்ரீவைஷ்ணவம் போதிக்கிறதல்லவா?

ஆனால், மறுகணமே.....

அவர் அருகில் எழுதப்பட்டிருந்த அவருடைய பெயர் என் கண்களை உறுத்தியது. ஏனென்றால் ராமானுஜ தாத்தாச்சாரியார் என்பது உத்தம வைணவப் பெயர். ஏழுமலையானால் 'தாத' என்று அழைக்கப்பட்ட உத்தம அடியவரின் வம்சாவளிக்கோ அல்லது அதன் நினைவாகவோ வைக்கப்படும் பெயர் 'தாத' என்பது. ஆச்சாரியார் என்பது ஆச்சாரிய ஸ்தானத்தில் இருந்து வைணவத்தை வாழ்ந்து காட்டுகிறவர் என்று பொருள்படும். 'ராமானுஜ' என்பது விசிஷ்டாத்வைத வைணவத்தை நாட்டில் பரவச் செய்த ஆதிசேஷனின் பெயர். இதெல்லாம் சரி! ஆனால் பச்சை மண்ணோடு சுட்ட மண்ணை ஒட்டுவது போல் அதென்ன 'அக்னி ஹோத்ரம்' என்ற ஒரு பட்டம்?! ஒரு வைணவன் தன்னை ராமானுஜதாஸன் என்றோ திருமால் அடியவன் என்றோ, தொண்டர் அடிப்பொடி என்றோ சொல்லிக் கொள்வது மரபு; நியாயம்!

ஒரு வைணவன் யாக, யக்ஞாதி உபாஸனா மார்க்கத்தில் கால் வைக்கலாகாது. கீதையில் சரம ச்லோகம் 'ஸர்வதர்மான் பரித்யஜ்ய' என்று அப்படித் தான் ஆணையிடுகிறது. அச்வமேதமோ, அபிசாரமோ செய்ய அவனுக்கு தகுதியில்லை. அது ப்ரபத்திக்கு விரோதம். இந்த நபர் தாம் செய்ததாலோ, அல்லது தம் முன்னோர் செய்ததாலோ 'அக்னிஹோத்ரம் செய்திருக்கிறோம், பாருங்கள்' என்று பெருமையாக தன் பெயருக்கு முன்னால் போட்டுக் கொள்கிறார் என்றால் அந்த இடத்திலேயே அவருடைய அறிவும் வாழ்க்கை முறையும் சரியான பாதையில் செல்லவில்லை என்று புலனாகிறது.

கட்டுரையின் கடைசி பாராவில் "வேதத்தில் சாந்த ஸ்வரூபியாக காட்டப் பட்ட விஷ்ணுவை பட்டரைக்காரர் போல ஆயுதம் தரிக்க வைத்து விட்டார்களே" என்று அங்கலாய்த்திருக்கிறார். இது ஒரு இந்தியனுடைய பேச்சாகத் தெரியவில்லை. மேல் நாட்டுக்காரர்கள் தான் வேதகாலம் வேறு என்றும், புராண காலம் வேறு என்றும் இதிகாச காலம் வேறு என்றும் வேதத்திலேயே ரிக் வேத காலம் வேறு, சாம வேத காலம் வேறு என்று வாய்க்கு வந்தபடி வரலாற்று ஆராய்ச்சி செய்வார்கள். வேதங்களும் இதிகாசங்களும், புராணங்களும் தெய்வீக வெளிப்பாடுகள் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. ரிஷி என்பவன் ஒரு 'மந்த்ர த்ரஷ்டா' என்றால் அதைப் புரிந்து கொள்ளக்கூட அவனுக்கு முடியாது அவன் "கார்பன் டேட்டிங் தியரி" படி கல்வெட்டுக்களையும் கடல் ஆழத்தையும் ஆய்வு செய்பவன்.

மனிதனைப் பெற்றது குரங்கு, குரங்கின் தோற்றம் நீர்த்துளிஎன்று பலவகையாக டார்வின் கண்ணோட்டத் திலே பகுத்தறிவுப் பாதையில் சிந்தித்துப் பழகியவன் அவன். அதிமானுஷ்யமும், ஆண்டவன் கருணையும் அவன் அகராதியில் இல்லை. குரங்கு கற்கால மனிதனாகி, கற்கால மனிதன் பொற்கால மனிதனாக மாறுவதற்கு இத்தனை ஆண்டுகள் என்றும் அவன் தற்கால மனிதனாவதற்கு இத்தனை ஆண்டுகள் என்றும் அவன் ஒரு கணக்கு போட்டு

வைத்திருக்கிறான். அவனுடைய தீர்மானப்படி இந்துமத வேதங்கள் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒவ்வொன்றும் தனித்தனியே ஒன்றன்பின் ஒன்றாக வெவ்வேறு கூட்டத்தாரால் இன்னின்ன சூழ்நிலையில் எழுதப்பட்டவை என்பது தான் ஒத்துக் கொள்ளக் கூடியது.

நாராயணன் இருந்தான் அவன் நாபியில் பிரம்மா இருந்தான், பிரம்மாவின் படைப்பில் வேதம் உதவியாய் இருந்தது, அது அனாதி, பரிமுகன் வெளிப் படுத்தினான் என்பதெல்லாம் மேல் நாட்டினரைப் பொறுத்தவரை எல்.கே.ஜி, யு.கே.ஜி, கதைகள். அவன்தான் சொல்வான். வேதத்தில் விஷ்ணு சாந்தமாயிருந்தான், பிற்காலத்தில் பட்டறைக்காரனாய் ஆயுதங்கள் தரித்தான் என்று, அதை வழிமொழிந்து எழுதுகிறார் இந்த வைணவர் மன்னிக்கவும் – அக்னி ஹோத்ரி!

சென்னையிலிருந்து கோயம்புத்தூருக்கு எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏறுகிறவனுக்கு அடிப்படை தேவை என்னவென்றால் அந்த ரயில் அவனை கோயம்புத்தூர் கொண்டு சேர்க்கும் என்ற நம்பிக்கை. அதற்கு பிறகுதான் டிக்கெட், ரிசர்வேஷன், லக்கேஜ் இவையெல்லாம் அந்த நம்பிக்கை யில்லாதவன் அந்த ரயிலில் ஏறமாட்டான்; ஏறக்கூடாது. அதுபோல நெற்றியில் திருமண் தரிக்கிறவர்கள் அதை தரிக்கச் சொன்ன வைணவம் காட்டும் வழியை நம்ப வேண்டும். அந்த நம்பிக்கையில்லாமல் வைணவ ஆசாரியமஹான்கள் சொன்ன விஷயங்களை புரட்டிப் பேசி புளுகாக்க எண்ணினால் மற்ற வைணவர்கள் அவரைப் பற்றி என்ன சொல்லுவார்கள்?"

நெற்றியில் திருமண்ணும், புத்தியில் வெறும் மண்ணும் தரிக்கும் இந்த உத்தம அக்னி ஹோத்ரிக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள் என்று சொல்ல மாட்டார்களா?

விஷ்ணு பகவானுக்கு, முன்பு இல்லாத சுதர்சன சக்கரம் பின்னால் வந்தவர்களால் கற்பிக்கப்பட்ட தென்றும், அவருடைய ஆயுதங்கள் பரிகாஸத்துக்கு உரியவை என்றும் நினைக்கிறவர் ஸ்ரீவைஷ்ணவ சமாச்ரயணத்தையே பரிகசிக்கிறார். ஏனென்றால் சுதர்சனர் இல்லாமல் சமாச்ரயணம் இல்லை. அப்படியானால் இவர் ஒரு வைணவர் இல்லை. ஏன்? சாஸ்த்திரத்தை பரிகசிக்கும் இவர் ஒரு இந்து கூட இல்லை! இந்த ஹோத்ரியின் அக்னி ஆபத்தானது. அணைய வேண்டியது . இது சமைக்கும் நெருப்பல்ல. யாகத்தின் நெருப்பல்ல. ஊரை கொளுத்தும் அக்னி. அணையிட்டும் இந்த அக்னி.

இந்து மதத்தின் காவலர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஆர். எஸ். எஸ் என்ன செய்கிறது? இவருடைய எழுத்துக்களை அவர்கள் இன்னும் கவனிக்கவில்லையா? இந்து முன்னணி என்ன செய்கிறது? விஸ்வ ஹிந்து பரீஷத் என்ன செய்கிறது?

இந்திய நாட்டு சட்டப்படி மத உணர்வுகளைப் புண்படுத்தக் கூடிய எழுத்துக்களும் பேச்சும், தண்டனைக்குரிய குற்றம்! சட்டம் கற்றவன் என்ற முறையில் இதை நான் உறுதியாகச் சொல்ல முடியும். இவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க பணக்கார பக்திமான்களோ, மதத்துறை நிறவனங்களோ உடனடியாக களத்தில் இறங்க வேண்டும்.

பெண்களின் கூந்தலுக்கு நறுமணம் உண்டா இல்லையா என்கிற பிரச்சனையில் நக்கீரனும் சிவபெருமானும் மோதிக் கொண்டார்கள். அப்போது சிவபெருமான் நக்கீரனைப் பார்த்து ஒரு வெண்பாவால் கேள்வி தொடுக்கிறார். 'அங்கம் புழுதிபட' என்று தொடங்கும் அந்த வெண்பாவின் முதல் இரண்டு அடிகள் நமக்கு இப்போது தேவையில்லை. அந்த பாடல் 'நக்கீரனோ என் கவியை ஆராய்ந்து சொல்லத் தக்கவன்'? என்று முடிகிறது. அதைத் தான் இப்போது நான் கேட்கிறேன். நக்கீரன் பத்திரிகையின் உரிமையாளர் முதல் கடைநிலை தொழிலாளர் வரை யாருக்காவது இந்து மதத்தைப் பற்றி பரிபூரணமாகத் தெரியுமா? வைதிக விஷயங்களைப் பற்றிய சர்ச்சைக் கட்டுரைகளைப் பிரசுரிக்க நக்கீரன் பத்திரிகைக்கு என்ன தகுதி இருக்கிறது? 100வயது கிழவிக்கு 25 வயது வாலிபன் மேல் காதல் ஏற்பட்டது போல் நக்கீரனுக்கு ஏன் இந்த விபரீத ஆசை?

என் கையில் உள்ள 13.7.2005நக்கீரன் இதழில் அக்னி ஹோத்ரியின் கட்டுரை எண் 61 என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் இதற்கு முன்பு 60 முறை இவர் எது எதையோ உளறிக் கக்கி யிருக்கிறார் என்று தெரிகிறது. அந்தப் பழைய இதழ்களைத் தேடிக் கொண்டிருக் கிறேன். அவை கிடைக்கும் என்ற நம்பிக்கையும் உண்டு. கிடைத்தவுடன் இந்த மஹா மேதையின் கேள்விகள் அனைத்துக்கும் இதே கீதாசார்யன் பத்ரிக்கையில் பதில் சொல்லப் போகிறேன் நிச்சயம். அடுத்த இதழில் உங்களை சந்திப்பேன். அதுவரை நன்றி வணக்கம்.